# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 171/2025 | LW– 1 | PW– 1 | |
| Name | : சந்தியா ( புகார்தாரர்) | | |
| Father's Name | : சசிகுமார் | | |
| Village | : லிங்கவாடி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 30/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை ஆட்டோவில் வரும்போது அடிபட்ட பின்னர் பார்த்தேன். கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு நாள் காலை சுமார் 5.30 மணியளவில் எங்கள் வீட்டில் நான் பாத்திரம் கழுவுவதற்காக செல்ல முயன்றபோது என் மகன் 2 1/2 வயதுள்ள மித்ரன் என்பவர் பருத்திப் பால் வாங்குவதற்காக எங்கள் வீட்டின் முன்பாக உள்ள லிங்கவாடியில் இருந்து வத்திப்பட்டி செல்லும் சாலையை கடந்து சென்று பருத்திப் பால் வாங்கிக் கொண்டு திரும்பி வரும்போது லிங்கவாடியில் இருந்து வத்திப்பட்டி நோக்கி அதிக வேகமாக வந்த ஆட்டோ என் மகன் மீது மோதி பட்டென்று சத்தம் கேட்டது. உடனே ஆட்டோவில் முன் பக்க சக்கரம் என் மகனின் நெஞ்சில் ஏறி இறங்கியது. நான் என் மகனை பார்த்தபோது வலது தோள்பட்டையில் சிராய்ப்பு

காயம் இருந்தது. நெஞ்சில் டயரின் தடம் இருந்தது, ஆனால் காயம் தெரியவில்லை. அப்போது அங்கு வந்த என் கொழுந்தனார் சந்திரகுமாரின் உதவியுடன் வத்திப்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்த்தபோது அவர்கள் நத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள்.

2) நாங்கள் நத்தம் அரசு மருத்துவமனை கொண்டு வந்து சேர்த்தபோது பரிசோதித்த மருத்துவர் வழியிலேயே என் மகன் இறந்துவிட்டதாக கூறினார். மேற்படி ஆட்டோவின் பதிவு எண் தற்போது ஞாபகமில்லை. மேற்படி ஆட்டோவை ஓட்டி வந்தவர் முருகன் என்றும், அவர் நத்தத்தைச் சேர்ந்தவர் என்றும் விசாரித்து தெரிந்து கொண்டேன். பின்னர் நான் நத்தம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் மனு <u>அ.த.சா.ஆ.1</u> ஆக <u>குறியீடு செய்யப்படுகிறது</u>**) போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

3) புகார் மனுவை யார் எழுதியது என்றால் நான்தான் எழுதினேன். சம்பவம் நடந்த அன்றைய தினமே மாலை சுமார் 6.30 மணியளவில் புகார் கொடுத்தேன். நத்தம் அரசு மருத்துவமனைக்கு எனது பையனுடன் மாலை சுமார் 6.00 மணியளவில் வந்தேன். வத்திப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எனது மகனை அழைத்து சென்ற விபரத்தை புகார் மனு மற்றும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயம் நான் பாத்திரங்களை அள்ளி வீட்டுக்கு வெளியே போட்டு விளக்க ஆரம்பித்தேன், அப்போதுதான் சம்பவம் நடந்தது. நான் இருந்த இடத்திலிருந்து சம்பவ இடம் 20 அடி தூரம் இருக்குமா என்றால் அடி அளவு தெரியாது, எனது வீட்டிற்கு அருகில்தான் சாலை உள்ளது. வத்திபட்டி சாலை ஆனது அகலமான சாலை என்றாலும், பேருந்து சென்று வரக்கூடிய அளவிற்கு அகலமாக இருக்கும் என்றாலும் சரிதான். எனது மகனுக்கு இரண்டரை வயது ஆகும். ஐந்து வயதுக்கு

கீழே உள்ள குழந்தைகளை சாலையை கடக்க அவர்களது பெற்றோர் தான் பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

4) பொதுவாக குழந்தைகளுக்கு சாலையை எவ்வாறு கடக்க வேண்டும் என்று தெரியாது என்பதால் பெற்றோர்தான் பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டும் என்றால் சரிதான். ஆட்டோவானது லிங்கவாடியில் இருந்து வத்திபட்டி ரோட்டில் சாலை ஓரமாக இடது புறமாக வந்தது என்றால் சரியல்ல, சாலையின் நடுவில் வேகமாக வந்தது. சம்பவம் இடத்திற்கு முன்பு உள்ள வளைவு பகுதியில் ஒரு வேகத்தடையும் அதற்கு அடுத்து சிறிது தூரம் தள்ளி மற்றொரு வேகத்தடையும் உள்ளது என்றால் இல்லை. சாலையில் வேகத்தடைகள் உள்ளது என்றாலும் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நத்தம் அரசு மருத்துவமனைக்கு காயம்பட்ட எனது மகனை எனது கொழுந்தனார் அழைத்துக் கொண்டு சென்றார், பின்னாலே நானும் சென்றேன்.

5) சம்பவ சமயம் நானும், எனது கணவரும் வீட்டில் இல்லை என்றாலும், அதனால்தான் சம்பவம் பற்றி எனக்கு சரியாக தெரியவில்லை என்றாலும் சரியல்ல. வாகனங்கள் வருகிறதா, இல்லையா என்பதை பார்த்து சாலையை கடக்க குழந்தைகளுக்கு தெரியாது என்றால் சரிதான். எனது குழந்தைக்கு இரண்டரை வயது என்பதால் வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையைக் கடக்க முயன்ற போது எதிர்பாராத விதமாக விபத்து நடந்தது என்றால் சரியல்ல. ஆட்டோ மெதுவாக தான் வந்தது என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு எதிரி பொறுப்பாகமாட்டார் என்றால் சரியல்ல. நஷ்ட ஈடு பெறுவதற்காக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:37:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.171/2025

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. | 171/2025 | LW- 2 | PW- 2 |
| Name | | : உதயகுமார் ( கண்ணுற்ற சாட்சி) | |
| Father's Name | | : முத்து | |
| Village | | : லிங்கவாடி | |
| Taluk | | : நத்தம் | |
| District | | : திண்டுக்கல் | |
| Age | | : 40/2026 | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கோயம்புத்தூரில் தனியார் மில்லில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் தம்பி மனைவி ஆவார். ஆஜர் எதிரியை நான் பார்த்திருக்கிறேன். கடந்த 18.04.2025ம் தேதி மாலை சுமார் 5.45 முதல் 6.00 மணியளவில் லிங்கவாடியில் இருந்து வத்திப்பட்டி செல்லும் சாலையில் வடக்கு தெருவில் அமைந்துள்ள எங்கள் வீட்டின் முன்பாக என் தம்பி மகன் மித்ரன் பருத்திப் பால் வாங்குவதற்காக சாலையின் வலது புறத்திலிருந்து தெற்கு பகுதியில் நின்று கொண்டிருந்த பருத்திப் பால் விற்பவரிடம் வாங்கிக் கொண்டு நின்று கொண்டிருந்தபோது லிங்கவாடியிலிருந்து வத்திப்பட்டி நோக்கி வந்த ஆட்டோ ஒன்று அதிவேகமாக வந்து சிறுவன் மீது மோதி டம் என்று சத்தம் கேட்டது. சத்தம் கேட்டு நான் ஓடிப் பார்த்தபோது, சிறுவன் ஆட்டோவின் சக்கரங்களுக்குள் சிக்கி ஆட்டோ

முன்னால் சென்று நின்றது. ஆட்டோவின் முன்புறம் முகப்பு விளக்கு உள்ளே வளைந்திருந்தது. ஆட்டோ ஏறி இறங்கியதில் சிறுவனுக்கு கை, கால், நெஞ்சு போன்ற பகுதிகளில் சிறு சிறு உராய்வு காயங்கள் காணப்பட்டது. சிறுவன் மீது ஆட்டோவின் முன் பக்கம் மற்றும் பின் பக்க டயர்கள் ஏறி இறங்கியுள்ளது. சிறுவன் ஆட்டோ சக்கரங்களுக்கு இடையே சுற்றப்பட்டுள்ளான்.

2) அப்போது ஆஜர் எதிரி என்னை என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள்ளுங்கள், முதலில் பையனை பாருங்கள் என்று சொல்லிவிட்டு நின்று கொண்டிருந்தார். மேற்படி ஆட்டோவின் பதிவு எண். TN 57 CW 1965 ஆகும். அப்போது நானும், என்னுடன் எனது இளைய தம்பி சந்திரகுமாரும் சேர்ந்து சிறுவனை முதலில் வத்திப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றோம். அங்கு பையனுக்கு ஒன்றுமே இல்லை, நினைவில்லாமல் இருப்பதால் நத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நான் சிறுவனை என் தம்பி சந்திரகுமாரின் தோளில் தூக்கியபோது அவர் மூக்கில் இருந்து கொழுப்பு போல் வழிந்துவிட்டது. என் தம்பியும், அவரது நண்பரும் நத்தம் அரசு மருத்துவமனைக்கு குழந்தையை அழைத்து சென்றார்கள். பின்னால் நானும் சென்றேன். நத்தம் அரசு மருத்துவமனையில் சிறுவனை பரிசோதித்த மருத்துவர் இறந்துவிட்டதாக கூறினார். பின்னர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு போலீசாருடன் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை அடையாளம் காட்டினேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

3) சம்பவம் நடந்த சமயம் நான் எங்கு இருந்தேன் என்றால் வீட்டிற்கு வெளியே இருந்தேன். எனது தம்பி குழந்தை மித்ரன் ரோட்டை கடந்து சென்று பருத்திப்பால் வாங்கி திரும்பி வரும் வரை நான் பார்த்துக் கொண்டு இருந்தேனா என்றால் இல்லை. சத்தம் கேட்ட பிறகுதான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். சிறுவன் ஆட்டோவின் சக்கரத்திற்குள் சென்று விட்டான்

என்ற விபரத்தை போலீசார் விசாரிக்கும் போது சொன்னேனா என்றால் சொன்னேன். நான் எனது முதல் விசாரணையில் சொல்லிய விபரங்கள் அனைத்தையும் போலீசார் விசாரிக்கும் போதும் சொன்னேனா என்றால் சொன்னேன்.

4) போலீசார் விசாரணையில் வத்திப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று விட்டு அதற்கு பிறகு தான் நத்தம் அரசு மருத்துவமனைக்கு வந்த விபரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். நத்தம் அரசு மருத்துவமனைக்கு குழந்தையுடன் நான் வந்தேனா என்றால் இல்லை, பின்னாலேயே வந்தேன். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அதனால் எனக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றாலும் சரியல்ல. விபத்தில் இறந்து போன சிறுவன் எனது தம்பி மகன் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:37:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 171/2025 LW- 3 PW- 3

| | |
|---|---|
| Name | : சந்திரகுமார் ( கண்ணுற்ற சாட்சி) |
| Father's Name | : முத்து |
| Village | : லிங்கவாடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் அண்ணன் மனைவி ஆவார். ஆஜர் எதிரியை நான் பார்த்திருக்கிறேன். கடந்த 18.04.2025ம் தேதி மாலை சுமார் 5.30 முதல் 6.00 மணியளவில் எங்கள் வீட்டின் முன்பாக உள்ள லிங்கவாடியில் இருந்து வத்திப்பட்டி செல்லும் சாலையில் எனது அண்ணன் மகன் மித்ரன் பருத்திப் பால் வாங்குவதற்காக சாலையின் வடக்கில் இருந்து தெற்கு பகுதியில் சென்று பருத்திப் பால் வாங்கிக் கொண்டு திரும்பும்போது லிங்கவாடியிலிருந்து வத்திப்பட்டி நோக்கி வந்த ஆட்டோ மோதியதில் சிறுவன் பேச்சு, மூச்சு இல்லாமல் கிடந்தார். குழந்தையைப் பார்த்தபோது வலது பக்க கை, நெஞ்சு பகுதியில் சிராய்ப்பு காயம் இருந்தது. நாங்கள் அந்த சமயத்தில் மேற்கொண்டு

காயங்களை சரியாக கவனிக்கவில்லை. மோதிய ஆட்டோ அங்கே நின்று கொண்டிருந்தது.

2) ஆஜர் எதிரிதான் ஆட்டோவை ஓட்டி வந்தவர் ஆவார். அவரும் அங்கேயே நின்று கொண்டிருந்தார். அவரைப் பற்றி விசாரித்தபோது அவர் பெயர் முருகன் என்று தெரிந்து கொண்டேன். மேற்படி ஆட்டோவின் பதிவு எண். TN 57 CW 1965 ஆகும். சிறுவனை நாங்கள் முதலில் வத்திப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டு சென்றோம். அங்கு குழந்தையை பார்த்துவிட்டு நத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். நானும், என் நண்பரும் குழந்தையை இருசக்கர வாகனத்தில் வைத்து நத்தம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். குழந்தையை பரிசோதித்த மருத்துவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார். பின்னர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

3) இறந்து போன சிறுவன் எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயம் நான் வீட்டிற்குள் இருந்தேன். சம்பவ இடத்திலிருந்து எனது வீடு சுமார் 50 அடி தூரத்தில் உள்ளது. சிறுவன் சாலையை கடந்து பருத்திப்பால் வாங்கி வந்ததை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது அத்தை நேரில் பார்த்து சத்தம் போட்டதும் நான் வெளியே வந்து பார்த்தேன். சம்பவ இடத்திலிருந்து வத்திப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் சென்று அதன் பிறகு நத்தம் அரசு மருத்துவமனைக்கு வருவதற்கு எவ்வளவு நேரம் ஆனது என்றால் சுமார் 20 நிமிடங்கள் ஆனது.

4) வத்திபட்டி ஆரம்ப சுகாதார நிலையம் சென்று விட்டு அதன் பிறகு நத்தம் அரசு மருத்துவமனைக்கு வந்தது குறித்து போலீசார் விசாரிக்கும் போது

**சொன்னேனா என்றால் சொன்னேன். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. இறந்து போன சிறுவன் எனது அண்ணன் மகன் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:37:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.171/2025

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 171/2025 LW- 5 PW- 4

| | |
|---|---|
| Name | : சசிக்குமார் ( கேள்வியுற்ற சாட்சி) |
| Father's Name | : முத்து |
| Village | : லிங்கவாடி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of February 2026

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து திருப்பூர் பனியன் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மனைவி ஆவார். ஆஜர் எதிரியை விபத்து நடந்த மறுநாள் பார்த்தேன். கடந்த 18.04.2025ம் தேதி மாலை சுமார் 6.00 மணியளவில் என் அண்ணன் உதயகுமார் மொபைல் போன் மூலம் என் மகன் மித்ரனை ஆட்டோ அடித்துவிட்டதாகவும், மருத்துவமனைக்கு கொண்டு செல்வதாகவும் கூறினார். அதன்பேரில் நான் நத்தம் அரசு மருத்துவமனையில் வந்து பார்த்தபோது குழந்தை இறந்துவிட்டதாக கூறினார்கள். மேற்படி சம்பவத்திற்கு என் மனைவி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். ஆட்டோ ஓட்டுநரின் பெயர் முருகன் என்றும், ஆட்டோவின் பதிவு எண். TN 57 CW 1965 என்றும் தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

2) சம்பவம் நடந்த சமயம் நான் திண்டுக்கல்லில் இருந்தேன். சம்பவம் பற்றி போனில் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றாலும், நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியின் போட்டோ மற்றும் ஆட்டோவின் போட்டோ போலீசார் காவல் நிலையத்தில் வைத்து காட்டியதில்தான் தெரியும் என்றால் சரியல்ல, எனது அண்ணன் போனில் புகைப்படம் எடுத்து வைத்திருந்தார். நான் சொல்வது போல் இந்த விபத்திற்கு எதிரி காரணம் அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.19 16:37:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்